இரண்டாம் பிரித்தெடுப்பின் பின்புள்ள நீர்க்கரைசலின் செறிவை $C_2$ கி.லீற்$^{-1}$ என்க.

மீண்டும் சம கனவளவுகள் பயன்படுத்தப்பட்டதனால்,

$\frac{2 - C_2}{C_2} = 4$

$C_2 = 0.4$ கி. லீற் $^{-1}$

மூன்றாம் தடவை பிரித்தெடுக்கப்பட்ட பின்பு உள்ள நீர்க் கரைசலின் செறிவை $C_3$ கி. லீற்$^{-1}$ என்க.

மீண்டும் சம கனவளவுகள் பயன்படுத்தப்பட்டதனால்,

$\frac{0.4 - C_3}{C_3} = 4$

$\therefore C_3 = 0.08$ கி. லீற்$^{-1}$

$\therefore$ மூன்றாம் தடவை பிரித்தெடுக்கப்பட்ட பின்பு உள்ள 25 ml நீர்க் கரைசலில் எஞ்சியுள்ள சேதனச் சேர்வையின் திணிவு $= \frac{0.08 \times 25 \text{ ml}}{1000}$

$= 0.002$ கிறாம்.

6. (a) (i) நாக உலோகத்திற்கும் நீர்ச் சோடிய மைதரொட்சைட்டிற்கும் இடையே நடைபெறும் தாக்க வீதத்தில் நாக உலோகத்தின் மேற்பரப்பின் பரப்பளவு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைச் செய்துகாட்டுவதற்குரிய தகுந்த பரிசோதனை ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

(ii) அமில ஊடகத்தில் $MnO_4^-$, $C_2O_4^{2-}$ ஆகிய அயன்களிடையே நடைபெறும் தாக்க வீதத்தில் வெப்பநிலை செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைச் செய்துகாட்டுவதற்குரிய தகுந்த பரிசோதனை ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

(b) 2B(aq) +3 C(aq) ---> D(s) + E(aq) + F(aq) எனும் தாக்கத்தின் வீதம் சிறிய, மாறா அளவு D(s) உண்டாகும்போது தேவைப்படும் நேரத்தை அளவிடுதல் மூலம் ஆய்வு செய்யப்பட்டது. B அடங்கிய ஒரு கரைசலையும் C அடங்கிய ஒரு கரைசலையும் பயன்படுத்தி மாறா வெப்பநிலையில் நடாத்தப்பட்ட இந்த ஆய்விலிருந்து பெறப்பட்ட தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| B அடங்கிய கரைசல், ml | C அடங்கிய கரைசல், ml | நீர், ml | நேரம், S |
|---|---|---|---|
| 15.0 | 25.0 | 10.0 | 18.0 |
| 20.0 | 25.0 | 5.0 | 10.1 |
| 25.0 | 8.0 | 17.0 | 7.6 |
| 25.0 | 2.0 | 23.0 | 30.2 |

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: ChemistrySabras

இத்தாக்கத்திற்குப் பொருத்தமான வீத விதியைப் பின்வருமாறு எழுதலாம்

வீதம் $\alpha\ [B(aq)]^x \times [C(aq)]^y$

மேலே குறிப்பிட்ட தரவுகளைக் கொண்டு x ஐயும் y யையும் கணிக்க.

(c) $SO_3^{2-}$ (aq), $I_2$ (aq) ஆகியவற்றுக்கிடையே உள்ள தாக்கத்தை பின்தாக்கமடையச் செய்யலாம் என்பதை நீர் எவ்வாறு காட்டுவீர் எ... க்குக.

குறிப்பு : பரிசோதனை விபரங்கள் அவசியமில்லை.

## விடை

(a) (i) 1. நாகம், பெரிய துண்டுகள், தூசு போன்ற (powder) வெவ்வேறு நிலைகளில் பயன்படுத்தப்படும்.

2. மேற்கூறிய நிலைகளில், ஒவ்வொன்றினதும் சமனான அளவுகள் நிறுத்தெடுக்கப்படும்.

3. இவ்விரு நிலைகளின் சமனான நிறைகள் ஒரே மாதிரியான இரு குடுவைகளினுள் இடப்பட்டு, ஒரே செறிவுடைய சம கனஅளவு NaOH கரைசல் ஒவ்வொரு குடுவையினுள்ளும் சேர்க்கப்படும்.

4. வெப்பநிலைகள் இவ்விரண்டு நிலைகளுக்கும் மாறாது பேணப்படும்.

5. இவ்விரு குடுவைகளில், நாகத் தூசு உள்ள குடுவையில் மிகக் கூடுதலாகவும் விரைவாகவும் வாயுக் குமிழிகள் வெளியேறுவதை அவதானிப்பதன் மூலம் நாக உலோகத்தின் மேற்பரப்பின் அளவு தாக்க வீதத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை அவதானிக்கலாம்.

குறிப்பு : தாக்க வீதங்களை குறிப்பிட்ட நேரத்தில் சேகரிக்கப்படும் வாயுவின் கனவளவின் மூலமாகவோ அல்லது குறிப்பிட்டளவு கனவளவு வாயுவைச் சேகரிக்கத் தேவையான நேரத்தின் மூலமாகவோ ஒப்பிட முடியும்.

(ii) 1. ஒட்சாலிக்கமில நீர்க் கரைசல் அல்லது சோடியம் ஒட்சலேற்று நீர்க் கரைசல் பரிசோதனைக்கு எடுக்கப்படும்.

2. இந் நீர்க்கரைசலினுள் ஐதான $H_2SO_4$ அல்லது ஐதான HCl அமிலம் சேர்க்கப்படும். (அமில ஊடகமாக்க)

3. இவ் அமில ஊடக நீர்க்கரைசலின் சமகனவளவுகள் (3ml) இரு சோதனைக் குழாய்களில் இடப்படும்.

4. 2–3 துளிகள் ஐதான $KMnO_4$ கரைசல் முறையே இவ்விரு சோதனைக் குழாய்களினுள்ளும் சேர்க்கப்படும்.

5. சோதனைக் குழாய்களுள் ஒன்று அறை வெப்பநிலையில் வைக்கப்படும். மற்றையது சூடாக்கப்பட்டு (warming) அவதானிக்கப்படும்.

6. சூடான குழாயில் உள்ள ஊதா நிறம் நிறமற்றதாக மாறுவதிலிருந்து, இத்தாக்க வீதத்தில் வெப்பநிலை செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை எடுத்துக் காட்டலாம்.

குறிப்பு : உருவாகும் $CO_2$ வாயுக் குமிழிகள் மூலமும் இத்தாக்கவீதமானது வேறுபடுவதை விபரிக்க முடியும்.

(b) வீதம் $\alpha\ [B_{(aq)}]^x \times [C_{(aq)}]^y$

வீதமானது எடுக்கும் நேரத்திற்கு நேர்மாறுவிகித சமனாகும்.

$C_{(aq)}$ இன் செறிவு மாறாதவிடத்து,

வீதம் $\alpha\ [B_{(aq)}]^x$

$[B_{(aq)}]^x\ \alpha\ V_{B\,(aq)}^{\ x}$

$\frac{1}{18}\ \alpha\ 15^x$ ------ ①

$\frac{1}{10.1}\ \alpha\ 20^x$ ------ ②

$\frac{①}{②} \Rightarrow \frac{\frac{1}{18}}{\frac{1}{10.1}} = \left(\frac{15}{20}\right)^x \qquad 0.5611 = (0.75)^x$

$\therefore X = 2$

$B_{(aq)}$ இன் செறிவு மாறாதவிடத்து,

வீதம் $\alpha\ [C_{(aq)}]^y$

$\frac{1}{7.6}\ \alpha\ (8.0)^y$ ------ ③

$\frac{1}{30.2}\ \alpha\ (2.0)^y$ ------ ④

$\frac{③}{④} \Rightarrow \frac{\frac{1}{7.6}}{\frac{1}{30.6}} = \left(\frac{8.0}{8.2}\right)^y \qquad 3.974 = 4^y$

$\therefore Y = 1$

(c) (1) திண்ம KI அல்லது NaI ஆனது செறி $H_2SO_4$ அமிலத்துடன் ... சூடாக்கப்படும். இதன் போது $I^-$ அயனானது $I_2$ வாக ஒட்சியேற்றப்படு... ஊதா நிற $I_2$ வாயுவாக வெளியேறும்.

(2) உருவாகும் $I_2$ வாயுவானது $CCl_4/CHCl_3/C_6H_6$ என்பவற்றின் ... மூலம் அகற்றப்படும். பின்பு வெளியேறும் வாயுவினையானது ... பொட்டாசியம் இருகுரோமேற்றுக் கரைசலை நிறமாற்றம் செய்யும் (செம்... நிறம் ——> பச்சை நிறம்) இதிலிருந்து இத்தாக்கத்தின் போது $SO_4^{2-}$ ... $SO_2$ வாக தாழ்த்தப்படுகின்றது எனலாம்.

7. (a) $aA(g) + bB(g) \rightleftharpoons yY(g) + zZ(g)$ எனும் தாக்கத்தின் $K_p$, $K_c$ ஆகியவற்று... உள்ள தொடர்புடைமையைப் பெறுக.

(b) $R_2Q_4(g) \rightleftharpoons 2RQ(g) + Q_2(g)$

எனும் சமநிலையைக் கவனத்திற் கொள்க. மூடிய பாத்திரம் ஒன்றினுள் ... இன் கீழ் 27°C இல் தூய $R_2Q_4$ வாயு இருக்கின்றது. இத்தொகுதிக்குள் குறி... ஊக்கியைப் புகுத்தியதும் மேற்படி சமநிலை பெறப்பட்டது. 27°C இல் சம... உள்ள இத்தொகுதியின் அமுக்கம் 6 atm ஆகும். 27°C இல் இத்தொகு... யையும் $K_c$ யையும் கணிக்க.

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: ChemistrySabras

$HIn_{(aq)} \rightleftharpoons H^+_{(aq)} + In^-_{(aq)}$

அல்லது

$HIn_{(aq)} + H_2O_{(cl)} \rightleftharpoons H_3O^+_{(aq)} + In^-_{(aq)}$

$\therefore K_{In} = \frac{[H^+] \times [In^-]}{[HIn]}$ அல்லது $K_{In} = \frac{[H_3O^+] \times [In^-]}{[HIn]}$

(i) இங்கு அமில ஊடகத்தில் HIn இன் செறிவானது $In^-$ இன் செறிவிலும் அதிகமாகும். இவ்வாறு HIn இன் செறிவு $In^-$ இன் செறிவைப் போல பத்து மடங்காகும் போது காட்டி அமில நிறத்தைக் காட்டும். ( HIn இன் நிறம்)

(ii) இதே போல் கார ஊடகத்தில் $In^-$ இன் செறிவானது HIn இன் செறிவிலும் அதிகமாகும். இவ்வாறு $In^-$ இன் செறிவு HIn இன் செறிவைப் போல பத்து மடங்காகும் போது காட்டி கார நிறத்தை ( $In^-$ இன் நிறம்) காட்டும்.

(iii) இவ்வாறு குறிப்பிட்டவை pH இடை வெளியில் அமில மூலக்காட்டி தனது அமில ஊடக, கார ஊடக நிறங்களைத் தெளிவாகக் காட்டுமெனின் இப் pH இடைவெளி காட்டியின் PH வீச்சு எனப்படும்.

குறிப்பு: $PH = PK_{In} + \log_{10}\frac{[In^-]}{[HIn]}$ எனும் சமன்பாட்டிலிருந்து காட்டியின் PH வீச்சானது $PK_{In} \pm 1$ எனக் காட்டலாம்.

8. (a) ஊக்கிகளின் நான்கு முக்கியமான இரசாயன இயல்புகள் பற்றி கருத்துத் தெரிவிக்க.

(b) (i) 'இயற்கைக் கதிர்த் தொழிற்பாடு' என்றால் என்ன என்பது பற்றி விளக்குக.

(ii) கதிர்க்காபன் அடிப்படையிற் காலம் (வயது) அறிதல் என்பதை விளக்குக.

(c) (i) $KF_2$ எனும் கருதுகோட் சேர்வையின் உறுதிப்பாட்டை ஆராய்வதற்குத் தேவையான போன் - ஏபர் சக்கரத்தைத் தருக.

(ii) இந்த போன் - ஏபர் சக்கரத்தில் $KF_2$ இன் சாலகச் சக்தியின் (lattice energy) இடத்திற்கு எதனைப் பயன்படுத்துவீர்?

## விடை

(a) (i) ஊக்கியானது தாக்கமொன்றில் பங்கு பற்றுமாயினும் தாக்க முடிவில் அதன் அளவு மாறாது காணப்படும்.

(ii) சமநிலைத் தாக்கமொன்றில் தாக்கச் சமநிலையை அடைய எடுக்கும் நேரத்தை மாற்றுமேயொழிய தாக்கிகளினதும், விளைவினதும் சார்பு அளவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தாது.

(iii) ஊக்கியானது தாக்கச் சமநிலை மாறிலியை பாதிக்காது. ஏவற் சக்தியிலேயே பாதிப்பை ஏற்படுத்தும்.

(iv) ஊக்கியானது, முற்தாக்க வேகத்தையும், பிற்தாக்க வேகத்தையும் கூட்டும் அல்லது இவ்விரண்டையும் குறைக்கும்.

(v) பொதுவாக தாக்கமொன்றிற்கு குறைந்த அளவு ஊக்கி போதுமானது. எனினும் சில வேளைகளில் பயனளிச்ச குறிப்பிட்ட தாக்கங்களில் ஊக்கியானது பயன்படுத்தப்படுவது முக்கியமாகும்.

(vi) சில வேளைகளில் மிகச் சிறிதளவில் சில பதார்த்தங்கள் ஊக்கியின் திறனை அதிகரிக்கச் செய்கின்றன. (ஊக்கித் தூண்டிகள்). வேறு சில பதார்த்தங்கள் ஊக்கியின் திறனைக் குறைக்கும் ஊக்கி நஞ்சுகளாகத் தொழிற்படுகின்றன.

(b) (i) சில பதார்த்தங்கள் தன்னிச்சையாக α, β, γ போன்ற துணிக்கைகளை காலல் செய்தல் இயற்கைக் கதிர்த்தொழிற்பாடு எனப்படும்.

(ii) 1. வளி மண்டலமானது $^{14}_{6}C/^{12}_{6}C$ விகிதத்தை மாறிலியாகக் கொண்டுள்ளது.

2. ஒளித் தொகுப்பினாலும், தாவர போசணிகளாலும் $^{14}_{6}C/^{12}_{6}C$ விகிதமானது உயிர்வாழ் அங்கிகளிலும் மாறிலியாகக் காணப்படுகின்றது.

3. உயிரங்கிள் இறந்தவுடன் $^{14}_{6}C/^{12}_{6}C$ விகிதமானது குறையத் தொடங்குகிறது. $^{14}_{6}C$ சமதானியானது கதிர்த் தொழிற்பாடுடையதால் தேய்வடைகிறது. ( $^{14}_{6}C$ இன் அரைவாழ்வுக் காலம் = 5600 வருடங்கள்)

4. இறந்த அல்லது புழைய மாதிரியிலுள்ள $^{14}_{6}C$ சமதானியின் தொழிற்பாட்டை தற்போதைய அல்லது உயிருள்ள மாதிரியிலுள்ள இச் சமதானியின் தொழிற்பாட்டுடன் ஒப்பிட்டு, இச் சமதானியின் அரை வாழ்வுக் காலத்தையும் கொண்டு அடிப்படையில் வயது அல்லது காலம் கணிக்கப்படும்.

(c) (i)

$K^{2+}2F^-_{(s)}$ ← சாலகச் சக்தி — $K^{2+}_{(g)} + 2F^-_{(g)}$

$\Delta H^\theta_{f(KF_2)}$ ↑ ; K யின் முதலாம், இரண்டாம் அயனாக்கற் சக்திகள் ↑ ; 2 x இலத்திரன் நாட்டச் சக்தி (F இன்) ↑

$K_{(s)} + F_{2(g)}$ —(K யின் பதங்கமாதல் சக்தி; $F_2$ வின் கூட்டல் பிரிகை சக்தி)→ $K_{(g)} + 2F_{(g)}$

$\Delta H^\theta_{f(KF_2)}$ என்பது $KF_{2(s)}$ சேர்வையின் நியமத் தோன்றல் வெப்பவுள்ளுறை

(ii) $CaF_2$ எனும் சேர்வையின் சாலகச் சக்தியைப் பயன்படுத்தலாம்.

பகுதி "இ" - கட்டுரை

இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. ஒவ்வொரு வினாவுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.

9. (a) வளியுடனும் நீருடனும் எப்படி, எந்த நிபந்தனைகளின் கீழ் பின்வருவன தாக்கம் புரியும்?

(i) சோடியம் (ii) மகனீசியம்

(b) பின்வரும் மாற்றல்களை எங்ஙனம் செய்து முடிக்கலாமெனக் குறிப்பிடுக.

குறிப்பு : சோதனைப் பொருள்களையும் தாக்க நிபந்தனைகளையும் உரிய இடங்களிலே தர வேண்டும். சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுத வேண்டியதில்லை.

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: ChemistrySabras

குறிப்பு : வாக்கியைப் பாத்திரத்தினுள் புகுத்தியபொழுது யாதொன்றும் பாத்திரத்திலிருந்து வெளியே செல்லவில்லை எனக் கருதுக.

(c) 0.1 mol $dm^{-3}$ நீர் NaOH இன் 50.05 $cm^3$ உம் 0.1 mol $dm^{-3}$ நீர் HCL இன் 49.95$cm^3$ உம் 25°C இல் ஒன்றாகக் கலக்கப்பட்டன. 25°C இல் இக்கலவையின் pH ஐக் கணிக்க. 25°C இல் $K_w = 1.0 \times 10^{-14}\ mol^2\ dm^{-6}$

(d) அமில மூலங் - காட்டிகளின் எளிய கொள்கையைக் கருத்திற்கொண்டு 'காட்டி ஒன்றின் pH வீச்சு' என்றால் என்ன என்பதை விளக்குக.

## விடை

(a) பின்வரும் சமநிலைத் தாக்கத்தைக் கருதினால்,

$$aA_{(g)} + bB_{(g)} \rightleftharpoons yY_{(g)} + zZ_{(g)}$$

$$Kp = \frac{P_Y^{\ y} \times P_Z^{\ z}}{P_A^{\ a} \times P_B^{\ b}} \qquad Kc = \frac{[Y]^y \times [Z]^z}{[A]^a \times [B]^b}$$

இச் சமனிலைத் தொகுதிக்குரிய கனவளவு V எனவும், வெப்பநிலை T எனவும் கொண்டால் (இத்தொகுதி இலட்சிய நடத்தையை உடையது.)

∴ PV= nRT யை பிரயோகிக்கும் போது

$$P_y = n_y\frac{RT}{V},\ P_z = n_z\frac{RT}{V},\ P_A = N_A\frac{RT}{V},\ P_B = N_B\frac{RT}{V}$$

$n_Y, N_Z, N_A, N_B$ ஆகியன முறையே Y,Z,A,B ஆகிய வாயுக்களின் மூல் எண்ணிக்கைகள் ஆகும்.

ஆனால் செறிவு $= \frac{n}{V}$

$$[Y] = \frac{n_Y}{V},\ [Z] = \frac{n_Z}{V},\ [A] = \frac{n_A}{V},\ [B] = \frac{n_B}{V}$$

$$\therefore P_Y = [Y] \times RT,\ P_Z = [Z] \times RT,\ P_A = [A] \times RT,\ P_B = [B] \times RT,$$

$$\therefore K_p = \frac{[Y]^y \times (RT)^y \times [Z]^z \times (RT)^z}{[A]^a \times (RT)^a \times [B]^b \times (RT)^b} = \frac{[Y]^y \times (Z)^z}{[A]^a \times (B)^b} \times (RT)^{\{(y+z)-(a+b)\}}$$

$$K_p = K_C \times (RT)^{\{(y+z)-(a+b)\}}$$

(b) $R_2Q_{4(g)} \rightleftharpoons 2RQ_{(g)} + Q_{2(g)}$ இவைக் கருதினால்.

$R_2Q_{4(g)}$ இன் சிறிய அளவு x ஆனது பின்வருமாறு பிரிகையடையும்

(1 - x) 2x + x

இங்கு அமுக்கம், வெப்பநிலை என்பன மாறிலிகள் ஆகும் எனவே அமுக்கமானது மூல் எண்ணிக்கைக்கு விகித சமனாகக் காணப்படும்.

$$\frac{6}{4} = \frac{1-x+2x+x}{1} = \frac{1+2x}{1}$$

x = 0.25



$$P_{RQ} = \frac{2x}{1+2x} \times 6 = \frac{0.5}{1.5} \times 6 = 2\ atm$$

$$P_{Q2} = \frac{x}{1+2x} \times 6 = \frac{0.25}{1.5} \times 6 = 1\ atm$$

$$P_{R2Q_4} = \frac{1-x}{1+2x} \times 6 = \frac{0.75}{1.5} \times 6 = 3atm$$

$$K_p = \frac{P_{RQ}^{\ 2} \times PQ_2}{P_{R2Q4}} = \frac{(2\ atm)^2 \times (1\ atm)}{(3\ atm)} = 1.333\ atm^2$$

ஆனால் $K_p = K_C\ RT^{\Delta n}$, $\Delta n=2$

$1.333atm^2 = K_C\ (0.082\ lit\ atm\ K^{-1}\ mol^{-1} \times 300\ K)^2$

$K_C = 2.203 \times 10^{-3} mol^2.\ lit^{-2}$ ஆகும்.

(c) 50.05$cm^3$ கரைசலில் உள்ள $OH^-$ அயன்களின் மூல் எண்ணிக்கை

$$= 0.1\ mol\ dm^{-3} \times \frac{50.05}{1000} dm^3 = \frac{5.005}{1000}\ mol$$

49.95 $cm^3$ கரைசலில் உள்ள $H^+$ அயன்களின் மூல் எண்ணிக்கை

$$= 0.1\ mol\ dm^{-3} \times \frac{49.95}{1000} dm^3 = \frac{4.995}{1000}\ mol$$

∴ (50.05 + 49.95) $cm^3$ கலவைக் கரைசலில் உள்ள மேலதிக (எஞ்சிய) $OH^-$ அயன்களின் மூல் எண்ணிக்கை.

$$\frac{5.005}{1000} - \frac{4.995}{1000} = \frac{0.01}{1000} \text{ மூல்கள்}$$

∴ $OH^-$ அயனின் செறிவு (விளைவுக் கரைசலில் உள்ள) :

$$\frac{\frac{0.01}{1000}}{100} \times 1000 = 0.0001 \text{ மூல் லீற்}^{-1}$$

ஆனால் $[H^+] \times [OH^-] = Kw$

$$[H^+] \times 10^{-4} mol\ lit^{-1} = 1.0 \times 10^{-14} mol^2\ lit^{-6}$$

$$[H^+] = \frac{1.0 \times 10^{-14} mol^2\ lit^{-6}}{10^{-4} mol\ lit^{-1}}$$

$$= 1.0 \times 10^{-10} mol\ lit^{-1}$$

$$\therefore P_H = -log_{10}[H^+] = -log_{10}[1.0 \times 10^{-10}] = 10$$

(d) அமில மூலக் காட்டிகளின் எளிய கொள்கைப்படி அவை மென்னமிலங்களாகவோ அல்லது மென்காரங்களாகவோ தொழிற்படும். இதனால் இவை நீர்க் கரைசலில் பின்வருமாறு தொழிற்படும். இதனால் இவை நீர்க் கரைசலில் பின்வருமாறு கூட்டப் பிரிகையடைகின்றன.

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: ChemistrySabras

பயன்படுத்தி $KCl.MgCl_2.6H_2O$ ———> தூய பொற்றாசியம்

(ii) கந்தகத்தைக் கொண்ட ஒரேயொரு சேர்வையாக $H_2SO_4$ ஐ மட்டும் பயன்படுத்தி

$H_2SO_4$ ———> தூய $BaSO_3$

(c) உங்களிடம் பொற்றாசியஞ் சல்பேற்று, பொற்றாசியம் பொசுபேற்று ஆகியன அடங்கிய நீர்க் கரைசல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இக் கரைசலில் உள்ள சல்பேற்று அயன்களின் செறிவையும் பொசுபேற்று அயன்களின் செறிவையும் எவ்வாறு துணிய எத்தனிப்பீர் என்பதை விளக்குக.

## விடை

(a) (i) (a) சோடியம் வளியிலுள்ள ஒட்சிசனுடன் தாக்கம் புரிந்து $Na_2O, Na_2O_2$ போன்ற சேர்வைகளை உருவாக்கும்.

(b) சோடியம் வளியிலுள்ள நீராவியுடன் தாக்கம் புரிந்து $H_2$ வாயுவையும், NaOH இனையும் உருவாக்கும்.

(c) சோடியமானது மிகவும் உக்கிரமாக நீருடன் தாக்குற்று ஐதரசன் வாயுவையும், NaOH இனையும் கொடுக்கும்.

(ii) (a) மகனீசியமானது வளியிலுள்ள ஒட்சிசனால் ஒட்சியேற்றப்பட்டு (வெப்பமாக்குகையில்) அதன் ஒட்சைட்டை உருவாக்கும் (Mgo).

(b) மகனீசியமானது வளியில் வெப்பமாக்கப்படும் போது அதன் நைத்திரைட்டைக் கொடுக்கும். $(Mg_3N_2)$

(c) மகனீசியம் கொதிநீருடன் அல்லது நீராவியுடன் தாக்குற்று $H_2$ வாயுவினையும் $Mgo / Mg(OH)_2$ வினையும் கொடுக்கும்

(d) மகனீசியமானது குளிர் நீருடன் மிகவும் மந்தமாகத் தாக்குற்று $H_2$ வாயுவையும், $Mg(OH)_2$ இனையும் கொடுக்கும்.

(b) (i) $KCl.MgCl_2.6H_2O$ வினை நீரில் கரைத்து பின்னர் $(NH_4)_2CO_3 / (NH_4)_3PO_{4(aq)}$ கரைசல் இடும் போது $Mg(OH)_2$ வீழ்படிவு பெறப்படும். இவ்வீழ்படிவை வடித்தெடுத்துப் பெறப்படும் வடிதிரவத்தை உலர் நிலைக்கு ஆவியாக்குவதனால் திண்ம KCl பெறப்படும். இதனை உருகிய நிலையில் மின்பகுப்பதன் மூலம் தூய பொட்டாசியத்தைப் பெறலாம்.

(ii) செறிந்த $H_2SO_4 + Cu_{(s)} \xrightarrow{\text{வெப்பமாக்கல்}} SO_2$

உருவாகும் $SO_2$ வாயுவை $Ba(OH)_{2(aq)}$ கரைசலினூடாகச் செலுத்துகையில் $BaSO_3\downarrow$ வீழ்படிவு பெறப்படும். இவ்வீழ்படிவை வடித்தெடுத்து உலர்த்தி தூய $BaSo_3$ இனைப் பெறலாம்.

குறிப்பு: $Cu_{(s)}$ க்கு பதிலாக கந்தகம், Zn என்பவற்றையும் பயன்படுத்தலாம்.

(c) (i) தரப்பட்ட நீர்க் கரைசலின் ( $So_4{}^{2-}{}_{(aq)}$ இனையும், $Po_4{}^{3-}{}_{(aq)}$ இனையும் கொண்டது) குறித்த கனவளவு ($25cm^3$) செம்மையாக அளந்தெடுக்கப்படும்.

(ii) இதனுள் ஐதான $HCl / HNO_3$ மிகையான $Bacl_{2(aq)}$ என்பவற்றைச் சேர்க்க. $BaSO_4\downarrow$ வீழ்படிவாகும்.

(iii) இவ்வீழ்படிவை வடித்தெடுத்து, உலர்த்தி செம்மையாக நிறுத்து, இதன் திணிவு அறியப்படும்.

(iv) இதிலிருந்து $SO_4{}^{2-}$ அயனின் செறிவைக் கணிக்க முடியும்.

(v) பெறப்பட்ட வடிதிரவத்திற்கு ( $Po_4{}^{3-}{}_{(aq)}$ ஐக் கொண்டது) சிறிதளவு மிகை $NH_4OH_{(aq)}$ சேர்க்க $Ba_3(Po_4)_2\downarrow$ வீழ்படிவாகும். இதனை வடித்தெடுத்து, உலர்த்தி இதன் திணிவு செம்மையாக அறியப்படும்.

(vi) இதிலிருந்து $PO_4{}^{3-}$ அயனின் செறிவு துணியப்படும்.

குறிப்பு : இங்கு அமில ஊடகத்திலேயே மிகையளவு $Bacl_{2(aq)}$ சேர்க்கப் படும். (ii) இல்.

10. (a) கைத்தொழில் ரீதியில் அமோனியாவை நைத்திரிக்கமிலமாக மாற்றஞ் செய்தலுக்கு உரிய இரசாயனத்தைச் சுருக்கமாக விளக்குக.

(b) நைத்திரிக்கமிலத்தைப் பயன்படுத்தி +2 ஒட்சியேற்ற நிலையில் உள்ள நைதரசனைக் கொண்டிருக்கும் சேர்வையை எவ்வாறு பெறலாம் என்பதைக் குறிப்பிடுக.

குறிப்பு : பொருத்தமான தாக்கத்திற்கு / தாக்கங்களுக்கு உரிய சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடு / சமன்பாடுகள் தரப்பட வேண்டும்.

(c) கனவளவுப்படி வளியிலுள்ள ஒட்சிசனின் சதவீதத்தை ஆய்வுகூடத்திலே துணிவதற்கு அமோனியா பயன்படுத்தப்படும் பரிசோதனை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

## விடை

(a) அமோனியா வாயுவானது, Pt ஊக்கி முன்னிலையில் உயர் வெப்பநிலையில் ஒட்சிசன் வாயுவினால் ஒட்சியேற்றப்படும். இவ்வாறு ஒட்சியேற்றப்படும்போது நைத்திரிக்கொட்சைட்டு வாயுவாக மாற்றப்படும். பின் $NO_{(g)}$ வாயுவானது மேலும் $O_{2(g)}$ வாயுவுடன் தாக்கமுற்று $No_2/N_2O_4$ ஆக மாற்றப்படும். $No_2/N_2O_4$ என்பன நீரில் கரைந்து $HNO_{2(aq)}, HNO_{3(aq)}$ என்பனவற்றைக் கொடுக்கும்.

குறிப்பு: ஊக்கியாக Pt க்குப் பதிலாக Cu, Ag என்பனவற்றையும் பயன்படுத்தலாம்.

(b) செம்பானது, ஐதான நைத்திரிக்கமிலத்துடன் (50% $HNO_{3(aq)}$) சேர்த்து வெப்பமாக்கப்பட $NO_{(g)}$ வாயுவைத்தரும்.

$3Cu + 8HNO_3$ ———> $3Cu(NO_3)_2 + 2NO\uparrow + 4H_2O$

குறிப்பு: Cu விற்குப் பதிலாக Zn, Mg, $Fe^{2+}$, $Hg^{2+}$ என்பனவற்றை குளிர் நிலையில் பயன்படுத்த முடியும்.

(c)

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: ChemistrySabras

... உபகரணத்தை அசைக்கும் போது (குலுக்கும்போது) $NH_4Cl$ கரைசலினால் Cu வலையானது நனைக்கப்படும். இதனால் A யிலுள்ள கரைசலானது நீல நிறமாக மாறும். இதன் போது B யிலுள்ள $NH_4OH_{(aq)}$ கரைசலானது பகுதி A யிற்குள் செல்லும். இவ்வாறு செல்வதனால், சிறிதளவு நேரத்தின் பின் (15 நிமிட) கரைசலின் நீல நிறத்தின் செறிவு குறையத் தொடங்கும். இப்போது இணைப்புக் குழாயிலுள்ள கரைசலையும் A யிற்குள் செலுத்திய பின்னர் பகுதி A யிலுள்ள கரைசலின் மொத்தக் கனவளவு அளக்கப்படும். இதன் கனவளவை $V_s cm^3$ என்க.

பரிசோதனையில் நிலையாகவுள்ள பகுதி A யினதும், இணைப்புக் குழாயினதும் மொத்தக் கனவளவும் அளந்தறியப்படும். இதன் கனவளவை $V_1 cm^3$ என்க.

காற்றின் கனவளவு $= (V_1 - 10)\ cm^3$

ஒட்சிசனின் கனவளவு $= (V_s - 10)\ cm^3$

∴ வளியிலுள்ள ஒட்சிசனின் கனவளவு வீதம் $= \frac{(V_s - 10)}{(V_1 - 10)} \times 100$

11. (a) 'அமோனியா – சோடா முறையுடன்' தொடர்புபட்ட பௌதீக இரசாயனக் கோட்பாடுகள் பற்றிச் சுருக்கமான விவரணம் ஒன்றை எழுதுக.

(b) எரிசோடாத் தொழிற்சாலை ஒன்றினால் ஏற்படக்கூடிய சூழல் மாசுறுதல் பற்றிய சுருக்கமான விவரணம் ஒன்றை எழுதுக.

**குறிப்பு :** முக்கியமானதும் பொருத்தமானதுமான நான்கு காரணிகளைக் கருத்திற் கொண்டாற் போதும்.

(c) புரோமின் மின்மறை (மின்னெதிர்) இயல்புகளைப் பொறுத்த வரை குளோரின், அயடீன் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ளது என்பதை நீர் எவ்வாறு பரிசோதனை மூலம் செய்து காட்டுவீர் என்பதை விளக்குக.

## விடை

(a) 1. பிறையின் $NH_3$ ஆல் நிரம்பலாக்கப்படும்.

2. இதன் போது வெப்பம் வெளிவிடப்படுவதனால் வெப்பநிலை தாழ்வாக வைக்கப்படும்.

3. $NH_3$ வின் கரைதல் வினைத்திறனை அதிகரிப்பதற்கு இவ்வாயு கீழிருந்து மேல் நோக்கி அமுக்கத்தில் செலுத்தப்படும். (Counter - Current Principle)

4. $NH_3$ யால் நிரம்பலாக்கப்பட்ட பிறையின் $CO_2$ வாயுவுடன் தாக்கமுற விடப்படும்.

5. இதன்போது வெப்பம் வெளிவிடப்படுவதனால் தாழ் வெப்பநிலையில் பேணப்படும்.

6. இங்கும் $CO_2$ வாயுவானது கீழிருந்து மேல் நோக்கி செலுத்தப்படுவதனால், கரைதல் வினைத்திறன் அதிகரிக்கும்.

7. இங்கு இரு சமநிலைத் தாக்கங்கள் நடைபெறும்.

(i) $NH_3 + H_2O \rightleftharpoons NH_4^+ + OH^-$

(ii) $OH^- + CO_2 \rightleftharpoons HCO_3^-$

8. இரண்டாவது தாக்கத்தில் $OH^-$ ஆனது $CO_2$ வால் அகற்றப்படுவதனால் கூடுதலான $OH^-$ அயன்கள் முதலாவது தாக்கத்தில் உருவாக்கப்படும்.

9. $HCO_3^-$ அயனின் செறிவு அதிகரிப்பதனால் கரைதிறன் பெருக்க அடிப்படையில் $NaHCO_3$ பளிங்காகும்.

இங்கு $Na^+$ அயனானது NaCl இல் இருந்து பெறப்படும்.

$Na^+ + HCO_3^- \longrightarrow NaHCO_3\ (solid)$

10. திண்ம $NaHCO_3$ இனை எளிதாக வேறாக்கிப் பெற தாழ் வெப்பநிலையானது பயன்படுத்தப்படும்.

11. $NaHCO_3$ யானது வேறாகப் பிரித்தெடுக்கப்பட்டு (தனியாக்கப்பட்டு) வெப்பப்படுத்தப்படும்.

$2\,NaHCO_3 \xrightarrow{\Delta} Na_2CO_3 + H_2O + CO_2\uparrow$

12. $NaHCO_3$ உருவாகும் விளைவுத் தாக்கம் பின்வருமாறு

$NaCl + NH_3 + CO_2 + H_2O \rightleftharpoons NaHCO_3 + NH_4Cl$

13. $NH_3$ வானது ஏபர் முறைத் தயாரிப்பால் பெறப்படும்.

14. $CO_2$ வானது சுண்ணாம்புக் கல்லை வெப்பப்படுத்துவதனால் பெறப்படும்

$CaCO_{3\,(s)} \rightleftharpoons CaO_{(s)} + CO_{2\,(g)}\uparrow$

15. இங்கு உருவாகும் CaO, $NH_4Cl$ என்பன $NH_3$ வைப் பெறப் பயன்படும்.

$CaO + 2NH_4Cl \rightleftharpoons CaCl_2 + 2NH_3\uparrow$

16. இவ் அமோனியா மீண்டும் பயன்படும்.

17. NaCl உம், $CaCO_3$ ம் தாக்கமடைந்து விளைவாகப் பின்வரும் தாக்கம் நிறைவேற்றப்படும்.

$2\,NaCl + CaCO_3 \rightleftharpoons Na_2CO_3 + CaCl_2$

18. $CO_2$ அகற்றப்பட மீண்டும் மீண்டும் 14. இலிருந்து கிடைக்கப்பெறும்

(b) (i) உருவாகும் NAOH இனால் தாவர விலங்குகளுக்குப் பாதிப்பு ஏற்படும்.

(ii) $Cl_2$ வாயுவானது வளிமண்டலத்தை மாசுபடுத்துவதனால் மனிதனுக்கும், தாவர விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் இயந்திரங்கள் (உலோகத்தாலான) அரிக்கப்படும்.

(iii) HCl இனால் (இது பக்க விளைவாகப் பெறப்பட்டால்) தாவர விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

(iv) NaCl இனால் மண்ணின் அமைப்பு மாற்றமடைந்து தாவரத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

(v) நுண்துளையுள்ள கல்னாரினால் தாவர விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

(vi) இரசமானது (Hg) கழிவாக கதோட்டாகப் பாவிக்கப்படின் இது உயிரினங்களுக்கு நச்சுத்தன்மையை ஏற்படுத்தும்.

(c) (i) குளோரின் நீரை, புரோமைட்டுக் கரைசலுக்குள் சேர்க்கும் போது $Br_{2(g)}\uparrow$ வெளிப்படுத்தப்படும். இவ்வாயு $CCl_4$ இல் கரைந்து செங்கபில நிறத்தைத் தரும்.

$Cl_2 + 2Br^- \longrightarrow 2Cl^- + Br_2\uparrow$

இதே போல், புரோமின் நீரை அயடைட்டுக் கரைசலுக்குள் சேர்க்கும் போது $I_{2(g)}\uparrow$ வாயு வெளிப்படும். இது $CCl_4$ இல் கரையின் ஊதா நிறத்தைத் தரும்.

$Br_2 + 2I^- \longrightarrow 2Br^- + I_{2(g)}\uparrow$

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: ChemistrySabras

12. (a) சுண்ணாம்புக் கல்லிலிருந்து ஆரம்பித்து வெளிற்றுந் தூள் உற்பத்தி செய்வது பற்றிய சுருக்கமான விவரணம் ஒன்றை எழுதுக.

(b) (i) களிமண் உருவாகின்ற முறை, களிமண்ணின் அமைப்பு ஆகியன சம்பந்தமாகச் சுருக்கமான விவரணங்கள் எழுதுக.

(ii) உங்களிடம் இரண்டு மண் மாதிரிகள் வழங்கப்பட்டுள்ளன. இரும்பு அதிகமுள்ள மண் மாதிரியை எவ்வாறு இனங்காண்பீர் என்பதை விளக்குக.

(c) ஒரு விசேட தேவைக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு வகையான இறப்பர் வற்கனைற்றுப்படுத்தப்படும் பொழுது கந்தகத்துடன் $CaCO_3$ உம் சேர்த்துப் பயன்படுத்தப்படும். இவ்வாறு பெறப்பட்ட இறப்பர் மாதிரி ஒன்றில் உள்ள $CaCO_3$ இன் சதவீதத்தை எவ்வாறு துணிய முற்படுவீர் என்பதைச் சுருக்கமாக குறிப்பிடுக.

**குறிப்பு: பரிசோதனை விபரங்கள் அவசியமில்லை.**

## விடை

(a) 1. சுண்ணாம்புக் கல்லை வெப்பமாக்கி CaO(நீறாத சுண்ணாம்பு) பெறப்படும்.

$$CaCO_{3(s)} \rightleftharpoons CaO_{(s)} + CO_2\uparrow_{(g)}$$

2. இது சமநிலைத் தாக்கமாதலால் $CO_2$ வாயுவானது உடனுக்குடன் அகற்றப்படும்.

3. போதியளவு நீர் தூவிந்து உலர் நீறிய சுண்ணாம்பு பெறப்படும்.

$$CaO + H_2O \longrightarrow Ca(OH)_2$$

4. தாழ் வெப்பநிலையில் உலர்ந்த நீறிய சுண்ணாம்பினூடாக குளோரின் வாயு செலுத்தப்படும் போது வெண்ணிறமான வெளிற்றும் தூள் படிவாகும்.

$$Ca(OH)_2 + Cl_2 \xrightarrow{\leq 50^\circ C} CaOCl_2 + H_2O$$

5. 12–15 மணித்தியாலங்கள் வரை இடைக்கிடை சூளையானது சுழற்றப்படும்.

(b) (i) மலைக் குன்றுகளில் காலநிலை மாற்றங்களால் களிமண் உருவாகின்றது. இங்கு நீர், $CO_2$, வெப்பம் என்பன காரணிகளாக அமைகின்றன.

$$\underset{\text{(Feldspar)}}{K_2O.Al_2O_3.6SiO_2} \xrightarrow{\text{நீரப்பகுப்பு } (2H_2O)} Al_2O_3.6SiO_2.H_2O + 2KOH$$

சிலிக்கேற்று நீக்கம் (De - silication)

$$Al_2O_3.6SiO_2.H_2O \longrightarrow Al_2O_3.2SiO_2.H_2O + 4SiO_2$$

$$Al_2O_3.2SiO_2.H_2O + 4SiO_2 \xrightarrow{\text{தொடர்ச்சியான காலநிலை மாற்றம்}} \underset{\text{(Clay)}}{Al_2O_3.2SiO_2.2H_2O}$$

(ii) தரப்பட்ட மண் மாதிரிகள் இரண்டிலிருந்தும் சமனான நிறைகள் எடுக்கப்பட்டு ஐதான $HNO_3$ யின் சமகனவளவுகளுடன் சேர்த்து நன்கு கலக்கப்பட்டு பின்னர் தனித்தனியே வடிகட்டி பெறப்படும் வடிதிரவத்தின் சம கனவளவுகள் எடுக்கப்படும். இவ்வடிதிரவங்களுள், சமகனவளவுகள் KCNS கரைசல் இடப்படும். பின் இதனை அவதானிக்கும் போது, இரும்பு அதிகமுள்ள மாதிரியிலிருந்து பெறப்பட்டதில் அதிகளவான சிவப்பு நிறம் அவதானிக்கப்படும்.

**குறிப்பு:** இப் பரிசோதனையை KCNS இற்குப் பதிலாக $NH_4CNS$ அல்லது $K_4Fe(CN)_6$ ஐ பயன்படுத்தியும் செய்து காட்டலாம்.

(c) வல்கனைசுப் படுத்திய இறப்பரின் மாதிரியின் குறிப்பிட்டளவை நிறுத்தல் வேண்டும். இதனை வளியில் நன்கு வன்மையாக வெப்பமாக்கி வெண்ணிற மீதி பெறப்படும். இவ்வெண்ணிற மீதி CaO ஆகும். இம் மீதியின் நிறை அறியப்பட்டால் மாதிரியிலுள்ள $CaCO_3$ இன் சதவீதத்தைத் துணிய முடியும்.

**குறிப்பு:** வன்மையாக வெப்பமாக்கி மாறா நிறை பெறப்பட வேண்டும்.

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: ChemistrySabras